NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 31 July 2018

# கட்டி முடிக்கப்பட்ட தனியார் அடுக்கு வீடுகள் விலை ஜூனில் 0.7% கூடியது

கட்டி முடிக்கப்பட்ட அடுக்குமாடி தனியார் வீடுகளின் விலை ஜூன் மாதம் மெதுவாகக் கூடியது. மாத அடிப்படையில் விலை உயர்வு 0.7% ஆக இருந்தது.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் குடியிருப்புச் சொத்து விலை அட்டவணை இந்த விவரங்களைத் தெரிவிக்கிறது.

கடந்த மே மாதம் இத்தகைய வீடுகளின் விலைகள் 1.6% கூடின. சிறிய வீடுகளை நீக்கிவிட்டு பார்க்கையில், மத்திய பகுதியில் இருக்கும் அடுக்குமாடி வீடுகளுக்கான விலைகள் மே மாதம் 2% கூடியிருந்தன. இந்த உயர்வு ஜூன் மாதத்தில் 0.4% ஆக இருந்தது.

மத்திய பகுதிக்கு வெளியே இருக்கும் வீடுகளின் விலைகள் மே மாதம் 1.4% அதிகரித்தன. இந்த உயர்வு ஜூன் மாதம் 0.8% ஆக இருந்தது. சிறிய வீடுகளை, அதாவது 506 சதுரஅடி வரை பரப்புள்ள வீடுகளைப் பொறுத்தவரையில், விலைகள் மே, ஜூன் மாதங்களில் மாற்றமின்றி 1.1% கூடின.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.